


புதுக்கோட்டை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்கில், 7th Hero Asian Champions Trophy, Pass the Ball Trophy Tour நிகழ்ச்சியில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி 25.07.2023 அன்று கோப்பையினை காட்சிப்படுத்தினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.த.ஜெயலட்சுமி, நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், மாவட்ட விளையாட்டு அலுவலர் செந்தில்குமார், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

## கேரளாவில் கனமழை!

திருவனந்தபுரம், ஜூலை 27 -

கனமழை காரணமாக கேரளா முழுவதும் 33 நிவாரண முகாம்கள் திறக்கப்பட்டு உள்ளன.

திருவனந்தபுரம், கேரளாவில் தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு தாமதமாக தொடங்கிய போதிலும், சில வாரங்களுக்கு முன்பு கனமழை பெய்தது. பின்பு ஒரு வார இடைவெளிக்கு பிறகு மீண்டும் மழை பெய்ய தொடங்கியது. தற்போது ஒருசில மாவட்டங்களில் கனமழையும், மற்ற மாவட்டங்களில் மிதமான மழையும் பெய்து வருகிறது. இந்த கனமழை 27ந்தேதி வரை நீடிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

# மருத்துவர் அய்யா இராமதாசு பிறந்த நாள்!

### 'சமூக நீதி தழைக்க தங்கள் உழைப்பு பயன்படட்டும்!'



சென்னை, ஜூலை 27 -

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் அய்யா இராமதாஸ் பிறந்த நாளை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் சமூக நீதி தழைக்க தங்கள் உழைப்பு பயன்படட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மருத்துவர் அய்யா இராமதாசு அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

**இன்று 85 ஆவது பிறந்தநாள் காணும் மருத்துவர் அய்யா இராமதாசு அவர்களுக்கு வாழ்த்துகள்!**

**இந்த மண்ணில் வேரூன்றியுள்ள சமூக நீதி அரசியலும் தமிழ் உணர்வும் தழைக்கத் தங்களது உழைப்பு பயன்படட்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# புதுக்கோட்டை மகளிர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் கண்டன உரை!

புதுக்கோட்டை, ஜூலை 27-

தாய்மையை நிர்வாணப்படுத்தி தலைகுனிய வைத்த மணிப்பூர் நிகழ்வை தடுக்கத் தவறிய ஒன்றிய மோடி அரசை கண்டித்து தமிழக முதல்வர் தளபதி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க

புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில் மாவட்ட துணைச் செயலாளர் பி.ராஜேஸ்வரி தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தை புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் துவக்கி வைத்து கண்டன உரையாற்றினார். மேலும் கழக இலக்கிய அணி துணை தலைவர் முன்னாள் சட்டப்பேர உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப் பித்தன், தலைமை கழக பேச்சாளர் வழக்கறிஞர் ஆரணி மாலா ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கமலா செல்வம், தெற்கு மாவட்ட மகளிர் அணி தலைவர் அமைப்பாளர் தேவி முத்து, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அ.பிரபா, தெற்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் பாத்திமா பீவி, , புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மகளிர் அணி தலைவர் மாலா ராஜேந்திர துரை, மகளிர் தொண்டரணி தலைவர் ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், தெற்கு மாவட்ட மகளிர் அணித் தலைவர் உஷா செல்வம், மகளிர் தொண்டர் தலைவர் நாகஜோதி, புதுக்கோட்டை நகராட்சி தலைவர் திலகவதி செந்தில், மேகலா முத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். புதுக்கோட்டை தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் ஸ்ரீதேவி அண்ணாதுரை அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

நிகழ்வுகளில் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா

த.சந்திரசேகரன், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், வி.என்.மணி, செ.அசோக் பாண்டியன், அரு.வீரமணி, க.மதியழகன், எம். லியாகத் அலி, ஆசெந்தில், க.ராஜேந்திரன், சு.சண்முகம், என்.சாத்தையா, தென்னலூர் எம்.பழனியப்பன், ஆர்.செல்லத்துரை, கே.எஸ்.சந்திரன், உதயம் சண்முகம், மு.க.ராமகிருஷ்ணன், தவ.பாஞ்சாலன், எம்.பரமசிவம், அ. முத்து, அழகு (எ) சிதம்பரம், வை.கோ.ராஜன், எம். எம்.பாலு, இராம.செல்வராஜ், அ.ரெத்தினம், டாக்டர் செ.குறிஞ்சிவாணன், டாக்டர் மு.க.முத்துக் கருப்பன், டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, வி.ஜி.ஆர்.மணி வண்ணன்,

ராஜேந்திரச்சோழன், அஸ்ரப் அலி, வி.என்.எம். பாலு, ராஜேஸ், செந்தாமரை பாலு, எஸ்.வி.ஆர். ஸ்டாலின் ராஜா, மு.கலைஞர் கருணாநிதி, டி. சுப்பிரமணியன், சதீஷ், அலி, வடவாளம் க.செ. மணிமாறன், ஏ.கே.செல்வம், தட்டாம்பட்டி ஆறுமுகம், ஞானசேகரன். டி. அப்புக்காளை, பிரேம் ஆனந்த வெற்றிச்செல்வன், செ.ரமேஷ், சி.அரங்கநாயகம், சுமோ பாலு, சுப. துரைராஜா, இதயம் அப்துல்லா, ராயல் சபா (எ) ரெத்தினசபாபதி, டி.தயாளன், காதர் கனி, மெஸ் கார்த்தி, வளர்மதி சாத்தையா, ஜெய்சங்கர், ஆதீஸ்வரன், தியாகு, விஜயக்குமார், ஆர்.எம்.சத்யா, ஜேம்ஸ், பிரபு, மகேந்திரன், மணிகண்டன், தெய்வானை மகேந்திரன், கவி வேந்தன், பால்ராஜ், சேதுராமன், ஜாகீர், தியாகு, கண்மணி சுப்பு,

ஆர்.சரோஜா தேவி, ko அல்லிமுத்து, ஜோதி, சரஸ்வதி, அழகு செல்வி, கமலம் சுப்பிரமணியன், ஜினி இளங்கோவன், தமிழ் ஓவியா. ஜெயாசீனிவாசன், பாண்டிச்செல்வி, சரஸ்வதி, வெண்ணிலா, கலா, ஆர்.சித்ரா, பார்கவி, ஜெயலட்சுமி, சாந்தகுமாரி, நளினா, மைக்கேலம்மாள், வித்யா ராஜேஸ், சரண்யா ஜெய்சங்கர், ஜெயந்தி வெள்ளைச்சாமி, சங்கீதா குப்புசாமி, ரேணுகா ராஜகோபால், தேவி, செந்தாமரை, க.மாரிக்கண்ணு, பவானி, தெய்வாணை, திலகம் கலியமூர்த்தி, ராஜராஜேஸ்வரி, கயல்விழி உள்ளிட்ட 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# திண்டிவனம் நகர தி.மு.க. சார்பில் 100 இடங்களில் கொண்டாடப்படும்!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேச்சு!

திண்டிவனம், ஜூலை 27 -

திண்டிவனம் நகராட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா 100 இடங்களில் சிறப்பாக கொண்டாடப்படும் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் நகர தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் திண்டி வனத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடை பெற்றது.

நகர அவைத் தலைவர் ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார்.



நகர கழக செயலாளர் கண்ணன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை திண்டிவனம் நகராட்சியில் 100 இடங்களில் சிறப்பாக கொண்டாடுவது எனவும் ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது எனவும் கழகத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பது உள்ளிட்ட பணிகள் குறித்து அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன், நகரத் துணைச் செயலாளர்கள் தாஜுதீன், ஓவியர் கௌதமன், ரேணுகா நகர பொருளாளர் சின்ன ராஜேந்திரன் மாவட்ட பிரதிநிதிகள்

முருகன், ராஜ சக்தி, சின்னதுரை, உள்ளிட்ட மாவட்ட, நகரகழக நிர்வாகிகள், அனைத்து அணி பொறுப்பாளர்கள், நகர மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட கழகத்தினர்கள் கலந்து கொண்டனர்.

### மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர்

# ஆடுதுறை மு.உத்திராபதி தாயார் முதலாம் ஆண்டு நினைவு நாள்!

### கழகத்தினர் அஞ்சலி!

தஞ்சாவூர் , ஜூலை 27 -

மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் வழக்கறிஞர் ஆடுதுறை மு.உத்திராபதி, மு.குப்புசாமி, மு. நாகலிங்கம் ஆகியோரின் தாயார் மு.சிங்காரத்தம்மாள் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி இன்று (27.07.2023 - வியாழக் கிழமை) காலை 10.00 மணி



யளவில் கும்பகோணம், உள்ளூர், சௌபாக்கியா நகரில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர்க் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதி நிதிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்த உள்ளனர்.

### திருவாரூர் மாவட்டத்தில்

# கூட்டுறவு சங்கத் தேர்தலை ஜனநாயக முறைப்படி எதிர் கொள்வோம்!

### மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டத்தில் பூண்டி கலைவாணன் அறிவுறுத்தல்!

திருவாரூர், ஜூலை 27 -

திருவாரூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் அவைத்தலைவர் க.தனராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தீர்மானங்களை விளக்கி பேசினார்.

மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

தமிழ்நாட்டில் நடைபெறும் பொற்கால ஆட்சியின் சிறப்பை இந்திய துணைக் கண்டமே பின்பற்றும் நிலையில், திராவிட மாடல் ஆட்சியின் பலனை நித்தம் அனுபவித்து வரும் தமிழ்நாட்டு மக்கள் அதற்கு பிரதியுபகாரமாக கழக கூட்டணியாம் I.N.D.I.A.வுக்கு வாக்களித்து வெற்றிபெறவைக்க காத்திருக்கும் அந்த வெற்றியை அறுவடைசெய்ய, கழக தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெரும் பாகநிலை முகவர்கள் பயிற்சிபாசறையில் பங்கேற்கும் முகவர்கள் அதற்கேற்ப செயல்பட்டு பணியாற்றி தொகுதிகளையும் கைப்பற்ற பாடுவது

மணிப்பூர் கலவரத்தில் நடைபெறும் வன்முறைகளையும் , பெண்கள்மீது கட்டவிழ்த்து விடப்படும் பாலியல் கொடுமைகளை தடுக்க எந்த நடவடிக்கைகளையும் எடுக்காமல் வேடிக்கை பார்க்கும் ஒன்றிய அரசின் செயல்பாடுகளை கண்டிப்பது

கடந்த அ.தி.மு.க. அட்சியில் கட்டவிழ்த்து விடப்பட்ட கூட்டுறவு சங்க தேர்தல் முறைகேடுகளை போல அல்லாமல் தமிழ் நாட்டின் திராவிட மடல் ஆட்சியின் மேன்மையை போற்றும் விதமாக கூட்டுறவு சங்க தேர்தலை ஜனநாயக முறைப்படி எதிர் கொள்வது, கூட்டுறவு சங்கங்களில் புதிய உறுப்பினர்களை இணைத்து வெற்றிபெற பாடுபடுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட ,ஒன்றிய ,நகர ,பேரூர் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### மணிப்பூரை முடக்கியவர்கள் – இப்போது

# நாடாளுமன்றத்தையும் முடக்குகிறார்கள்!

### பிரதமர் மோடிக்கு 'தீக்கதிர்' நாளேடு கண்டனம்!

சென்னை, ஜூலை 26-

நாடாளுமன்ற முடக்கத்திற்கு பிரதமர் மோடியே பொறுப்பு என்று 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து 25.7.2023 தேதிய 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

மணிப்பூர் மாநிலம் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. இதுகுறித்து வாய்திறக்கவே பிரதமர் நரேந்திர மோடி 78 நாட்கள் எடுத்துக்கொண்டார். இப்போது நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத் தொடர் நடந்துவரும் நிலையில் அவையில்


தீக்கதிர்
2023 ஜூலை 25 செவ்வாய்க்கிழமை

நாடாளுமன்ற முடக்கத்திற்கு மோடியே பொறுப்பு

மணிப்பூர் மாநிலம் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. இதுகுறித்து வாய்திறக்கவே பிரதமர் நரேந்திர மோடி 78 நாட்கள் எடுத்துக்கொண்டார். இப்போது நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத் தொடர் நடந்துவரும் நிலையில் அவையில் இது குறித்து விளக்கமளிக்கக் கூட அவர் தயாராக இல்லை.

மணிப்பூர் மாநிலத்தை எட்டிக்கூட பார்க்காத பிரதமர் இப்போது இதுதொடர்பான நாடாளுமன்ற விவாதத்திலும் பங்கேற்க மறுக்கிறார். கடந்த நாடாளுமன்ற கூட்டத்தொடரில் பிரதமரின் நெருங்கிய கூட்டாளியான கவுதம் அதானியின் மோசடி குறித்து விவாதிக்க மறுத்து நாடா...

இது குறித்து விளக்கமளிக்கக் கூட அவர் தயாராக இல்லை.

மணிப்பூர் மாநிலத்தை எட்டிக்கூட பார்க்காத பிரதமர் இப்போது இதுதொடர்பான நாடாளுமன்ற விவாதத்திலும் பங்கேற்க மறுக்கிறார். கடந்த நாடாளுமன்ற கூட்டத்தொடரில் பிரதமரின் நெருங்கிய கூட்டாளியான கவுதம் அதானியின் மோசடி குறித்து விவாதிக்க மறுத்து நாடாளுமன்றத்தை ஆளுங்கட்சியான பா.ஜ.க.வே முடக்கியது. காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ராகுல்காந்தி வெளி நாட்டில் இந்தியாவை இழிசெய்து பேசிவிட்டதாக புனைந்து கூறி இரு அவைகளையும் நடத்தவிடாமல் செய்தது பா.ஜ.க.

இப்போது மழைக்காலக் கூட்டத்தொடரையும் முறையாக நடத்தவிடாமல் பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் முடக்க முயல்கின்றன.

மணிப்பூர் விவகாரம் குறித்து விவாதத்தில் பங்கேற்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகளுக்கு நாடாளுமன்ற அலுவல் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆனால் பிரதமர் மோடி நாடாளுமன்றத்தில் மணிப்பூர் நிலைமை குறித்து விளக்கமளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்க மறுக்கிறது ஒன்றிய அரசு.

பெண்கள் மீதான வன்முறைகள் வேதனை அளிப்பதாக போலிக்கண்ணீர் வடிக்கும் அமைச்சர் அதுகுறித்து நாடாளுமன்றத்தில் முறையாக விவாதம் நடத்தி பிரதமர் பதிலளிப்பார் என்று கூறத் தயங்குவது ஏன்?

நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை அருகே மணிப்பூர் விவகாரம் தொடர்பாக போராட்டம் நடத்தப்படும் என்று 'இந்தியா' கூட்டணி எம்.பி.க்கள் அறிவித்திருந்த நிலையில் இராஜஸ்தான் மாநில பா.ஜ.க.எம்.பி.க்கள் அந்த இடத்தில் மாநில அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தியுள்ளனர். இதற்கு காரணம் பிரதமர் மோடியின் பொறுப்பற்ற பேச்சுதான்.

மணிப்பூர் தொடர்பாக தாமதமாக வாய் திறந்த பிரதமர், சத்தீஷ்கர் மற்றும் இராஜஸ்தான் மாநிலங்களிலும் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று கூறிய நிலையில்தான் இராஜஸ்தான் மாநில பா.ஜ.க. எம்.பி.க்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் மணிப்பூர் தொடர்பாக பிரதமர் பதிலளிக்க வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் கோருவது குறைந்தபட்ச கோரிக்கையே ஆகும். பிரதமர் இதற்கு இசைந்து விவாதத்திற்கு பதலளிக்க முன்வந்தால் நாடாளுமன்றம் நடைபெற ஏதுவாகும். ஆனால் ஒன்றிய அரசுக்கு அந்த நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. மணிப்பூரை முடக்கியவர்கள் இப்போது நாடாளுமன்றத்தையும் முடக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.




முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பொள்ளாச்சி நகர கழக சார்பாக தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் முன்னிலையில் தலைமை நகர மன்ற தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன், நகர செயலாளர் நவநீதகிருஷ்ணன் மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டார்கள். இந்தக் கூட்டத்தில் சேலம் சுஜாதா சிறப்புரையாற்றினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சா. இராமமூர்த்தி

**ஜூலை 27 (2013)**



**இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**ஒருங்கிணைந்த சென்னை மாவட்டத்தில் இருபது ஆண்டுகள் வட்டக் கழகச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில் கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு அரும்பாடுபட்டவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**